Ti Nb Ir Ta Ru Pt

**Ti Anode Fabricators Pvt. Ltd.**

An ISO 9001 : 2008 Certified

Tiaano® Innovation In Inert Metals — 23 YEARS Since 1992

# 48 Noothanchary, Madambakkam, Chennai – 126, India. Ph: +91 44 2278 1148 Fax: 22781362 Mob: +91 94445 69900 Email: marketing@tianode.com Web: www.tianode.com

## "கண்டம் விட்டு கண்டம் தாண்டி நாளை அண்டம் ஆளும் இந்தியா"

### GOAL 2015-2016

- **Endeavor** : QUALITY
- **Turnover Target** : 156% ↑
- **Products for …**
  - Consumer Market : 3%
  - Green Environment : 25%
- **Rejection Rate** :100% ↓

### TESTIMONIALS

- **Customers…**
  - Up to Sep. 15 : 896 Nos.
  - Up to Aug. 15 : 884 Nos.
- **Performance Sep. 15 …**
  - Turnover growth : 1.70%
  - Employment growth : -0.56%
  - 100% Attendance : 10.55%

### MANAGEMENT

- **Managing Director**
  - Mr. V. P. Jeyakumar
- **Board of Directors**
  - Ms. P.E. Nancy
  - Mrs. J. Vanajambika

### OUR FORMULATIONS

- Tiaano – Electro Chemical & Exotic Metal Equipments
- Aquafil – Water Treatment Equipments.
- Fib Tec Composite – FRP/ GRP Equipments.
- HydroGen Go Green – HHO Generators
- Titanictrade (We deliver value chain) – Portal for Exotic Metals
- Tiaano Vidyashrm – Tiaano Vidyashrm (CBSE Curriculam)




## வெற்றி தருவார்!

இராபர்ட் புருஸ் என்ற ஸ்காட்லாந்து தேச மன்னன் 6 தடவை தன் எதிரிகளிடம் போரில் தோற்றான். எனவே, நாட்டைவிட்டு காட்டுக்கு ஓடி ஒரு குகையில் மனம் உடைந்தவனாய் படுத்திருந்தான். அந்தக் குகையின் ஒரு முனையில் சிலந்திப் பூச்சி ஒன்று கூடுகட்ட பெரும் முயற்சி செய்து கொண்டிருந்தது. தன் வயிற்றிலிருந்து வெளிவந்து கொண்டிருந்த நூலை, ஒரு பகுதியிலிருந்து அடுத்த பகுதிக்குக் கொண்டிசெல்ல அது முயன்ற ஒவ்வொரு முறையும் தடுமாறி கீழே விழுந்தது.

எனினும், அது மனம் சலிக்கவில்லை. ஏழாவது முறை தன் முழு பலத்தோடு தாவி, மறுபகுதியை பிடித்தது. கூட்டையும் கட்டி முடிந்தது. இதைக் கவனித்துக் கொண்டிருந்த இராபர்ட் புருஸ் மனதில் ஒருவித தெம்பு, திடம் உண்டானது. நானும் ஏழாவது முறை முழுபலத்துடன் முயற்சி செய்து வெற்றி பெறுவேன் என்று எழுந்து சென்றான். வெற்றியும் பெற்றான். எனவே, நாமும்கூட நமது முயற்சிகளில் சோர்ந்து போகலாகாது. இறைவன் நிச்சயம் வெற்றியைத் தருவார்.

*Compiled By : Ms. P. E. Nancy*
*Director – Admin*

## நிதி இலக்கை அடைவது எப்படி?

நிதி இலக்கு என்பது, பணத்தை அடிப்படையாக கொண்ட ஒருவரது இலக்காகும்.

உதாரணம்: கார், வீடு வாங்குவது, அவசர நிதி, ஓய்வு கால நிதி உருவாக்குவது, கடனில் இருந்து விடுபடுவது போன்றவை.

### இலக்குகள் மூன்று வகை

**குறுகிய கால இலக்கு**

ஓராண்டு அல்லது அதற்கு குறைவான காலத்தில் அடையக்கூடியவை.

உதாரணம்: ஸ்மார்ட் போன் அல்லது டிஜிட்டல் கேமரா வாங்குவது. கிரெடிட் கார்டு கடனை அடைப்பது.

**நடுத்தர கால இலக்கு**

ஒன்று முதல் ஐந்து அல்லது 10 ஆண்டு காலத்திற்கான இலக்கு.

உதாரணம்: பைக், கார் வாங்குவது, விடுமுறைக்கு பயணம், மேலும் சிறந்த வேலைக்கு செல்வது.

**நீண்ட கால இலக்கு**

பத்து அல்லது அதற்கு மேலான ஆண்டுகள் கொண்ட இலக்குகள்.

உதாரணம்: சொந்த வீடு வாங்கி கடன் அடைப்பது, வயதான காலத்தில் உதவ ஓய்வூதிய நிதி.

### இலக்குகளின் தன்மை

**பொறுப்புகள்**

பிள்ளைகளின் கல்வி, பெற்றோரை கவனிப்பது, திருமண செலவு.

**தேவைகள்**

வீடு வாங்குவது, வளமான எதிர்காலத்திற்கு சேமிப்பது.

**கனவுகள்**

கார் வாங்குவது, வெளிநாடு பயணம் மேற்கொள்வது.

*நன்றி*
*தினமலர்*

## FUNCTIONAL WISHES




Diwali
10th November

Children's Day
14th November





Thirukarthigai
25th November

**Best Wishes from Tiaano Employees**

## EXTERNAL SUPPORT

| | |
|---|---|
| Banking | : M/s. UCO Bank |
| Auditing | : M/s. Nisar & Kumar |
| AQ Auditing | : M/s. Juran Quality |
| Legal Advisers | : Lr. M.K. Govindan |
| | : Lr. V. Benedict Vincent |
| Tech. Consultant: | Dr.G.S. Viswanath |
| Central Excise | : Mr. R. Raghavan |
| Health Care | : M/s. Bethesda Hospital |
| | Tel: 22294565 |
| ESI Corporation | Tambaram Dispensary |
| | Tel: 044 2226 0194 |

## BIRTH DAY WISHES

எந்தக் குழந்தையும் நல்லக் குழந்தைதான் மண்ணில் பிறக்கையிலே!
அவர் நல்லவராவதும் தீயவராவதும் அன்னை வளர்ப்பினிலே!

**Mr. A. Mohan** **10th Nov.**
Design



**Mr. B. Mathavan** **14th Nov.**
Production

**Mrs. M. Loganayagi** **21st Nov.**
Coating

**Mr. G. Kingston Andrewspaul** **30th Nov.**
Finance

**Best Wishes from Tiaano Employees**

- Aim in Life
- Acquiring the Knowledge
- Hard work
- Perseverance

\- Dr. A. P. J. Abdul Kalam

## சுற்றுச்சூழல் மாசுப்படுவதை எறும்புகளால் தடுக்க முடியுமாம்

இருபத்தியொன்றாம் நூற்றாண்டில் மானிடத்தின் மிகப் பெரிய சவாலாக இருக்கும் சுற்றுச்சூழல் மாசுக்களை நீக்க எறும்புகளை ஒரு பலமிக்க ஆயுதமாக பயன்படுத்த முடியும் என அரிஸோனா பல்கலைக் கழகப் பேராசிரியர் ரொனால்ட் டோர்ன் கண்டுபிடித்துள்ளார். சராசரியாக ஒரு வருடம் மட்டுமே வாழ்ந்து இறக்கும் எறும்புகள் பூமியில் அதிகரித்து வரும் வெப்பத்தை இயற்கையாகவே குறைக்கின்றன. "எறும்புகள் சுற்றுச் சூழலை மாற்றுகின்றன" என்ற தலைப்பில் அவர் வெளியிட்டுள்ள ஆராய்ச்சி கட்டுரையில் தெரிவித்துள்ளார்.

தன் நீண்ட கால ஆராய்ச்சியின் மூலம் மண் துகள்களில் எறும்புகள் ஏற்படுத்தும் பாதிப்பு பூமியின் ஒட்டு மொத்த வெப்பத்தை குறைக்கிறது என அதிகாரப்பூர்வமாக தன் ஆராய்ச்சி முடிவில் அறிவித்துள்ளார். ஒரு சில எறும்பு வகைகள் தாங்கள் வாழ்வதற்கு புற்று உருவாக்கும் முயற்சியாக மண்ணில் இருக்கும் கால்சியம் கார்பனேட் என்ற வேதிப்பொருளை தனியாக பிரிக்கின்றனவாம். லைம் ஸ்டோன் என பிரபலமாக அழைக்கப்படும் இந்த கால்சியம் கார்பனேட்டை எறும்புகள் உருவாக்கும் பொழுது ஒரு பக்க வினையாக ஒரு சிறு துளி கார்பன் – டை – ஆக்ஸைட் வாயு சுற்று சூழலிலிருந்து நீக்கப்படுகிறதாம். எறும்புகள் நடத்தும் லைம் ஸ்டோன் தயாரிக்கும் இந்த தொழிற்சாலை பூமி என்ற கோளை குளிர்விக்க இயறக்கை நடத்தும் கார்பன் சீக்யூஸ்ட்ரேஷன் என்ற பிரமாண்ட தொழிற்ச்சாலையின் ஒரு சிறு வடிவமே எனப்படுகிறது.

ஒரு எறும்பு தன் வாழ்நாளில் ஆயிரமாயிரம் துளி கார்பன் – டை – ஆக்ஸைட் துளிகளை சுற்றுச்சூழலிலிருந்து நீக்குகிறதாம். பூமியில் எட்டு வகை எறும்புகள் தாங்கள் வாழ புற்று உருவாக்கும் முயற்ச்சியாக கால்சியம் கார்பனேட்டை உருவாக்கும் சக்தியுடன் இருக்கின்றனவாம். இந்த ஆராய்ச்சி முடிவின் காரணமாக இத்தகைய சக்தி கொண்ட மணலில் வாழும் உயிரினங்கள் பூச்சி வகைகள் வேறு எதாவது உள்ளனவா என கண்டறிய மேலும் பல ஆராய்ச்சிகள் தொடங்கப் பட உள்ளனவாம்.

*Compiled By : Mr. K. Manivannan*
*Marketing*

## நல்ல நண்பர் ஆவது எப்படி

1. கொடுத்த வாக்கைக் காப்பாற்றுங்கள்.
2. உங்களால் செய்யமுடியாத விஷயங்களை வாக்குறுதிகளாகத் தராதீர்கள்.
3. தப்பு செய்தால் தயங்காமல் மனதார மன்னிப்பு கேளுங்கள்.
4. இதை இவர் எப்படியும் செய்வார் என்ற நம்பிக்கையை நண்பர்களுக்குக் கொடுங்கள்.
5. இன்பங்களில் இணையாவிட்டாலும் துன்பங்களின் போது துணை நில்லுங்கள்.
6. மன்னிப்பு கேட்பது போல மன்னிக்கவும் கற்றுக் கொள்ளுங்கள்.
7. நண்பர்களின் பிரச்சனைகளைப் புரிந்து கொண்டு பிராக்டிகலான தீர்வு சொல்லுங்கள்.
8. எப்போதாவது எதையாவது செய்யமுடியாது போனால் அதற்கான உண்மைக் காரணத்தைச் சொல்லி விடுங்கள்.
9. எப்போதும் தொடர்பில் இருங்கள்.

*Compiled By : Mrs. M. Sudha*
*Marketing*

## தெரிந்து கொள்வோம்

### Health Benefits of Dark Chocolate

- High in Potassium, Copper, Magnesium and Iron.
- Increases blood flow to the brain.
- May lower blood pressure.
- May reduce risk for stroke.
- High in Antioxidants.
- Helps control blood sugar.
- Improves mood.

*Compiled By : Mrs. K. Shreemadhi*
*Administration*

### Keep Dengue Mosquitoes Away

Although cloves gives us a pleasant aromatic fragrance but this was not liked by the Dengue mosquitoes. They can't stand this spice scent which is most commonly used for culinary purposes. So these cloves are considered as an effective remedy in repelling the house flies and Dengue mosquitoes.

In this process, the aroma of cloves with lemon combination which is another effective ingredient in which the Dengue mosquitoes want to resist the smell therefore an effective repellent.

Cut Lemon in to 2 and put 10-15 cloves in each half of lemon and keep in your room. You will not get Dengue mosquitoes in your Room.

### முளைக்கட்டிய வெந்தயம்

சிறிது நேரம் ஊறவைத்து, ஈரப்பருத்தித் துணியில் முளைக்கட்டி சாப்பிடலாம்.

பலன்கள்:

கடுமையான சர்க்கரை நோயாளிகள் தினமும் கட்டாயம் ஒரு கப் எடுத்துக் கொள்வதன் மூலம் சர்க்கரையின் அளவு கட்டுப்படும்.

வயிற்றுப்புண், பெண்கள் கர்ப்பப்பை நோய்கள் மற்றும் எப்படிப்பட்ட அல்சரையும் குணப்படுத்தும். ஒரு கப் அளவுக்கு எடுத்துக் கொள்ளலாம்.

*Collected from Internet*

### முயற்சி வெற்றி தரும்

ஒரு அரசனுக்கு திடீரென இரண்டு கண்களும் குருடாகிவிடுகிறது. அதை குணப்படுத்த மலை உச்சியிலுள்ள சஞ்சீவி மூலிகையை கொண்டு வந்து பிழிந்தால் தான் முடியும். அதற்கு மலையடிவாரத்தில் உள்ள தேவதை வழிகாட்டினால் தான் முடியும். அந்த அரசனுக்கு மூன்று குமாரர்கள். அதில் முதலாமவன் கொண்டு வருகிறேன் என கிளம்புகிறான்.

தேவதை வழிகாட்ட ஓர் நிபந்தனை விதிக்கிறது, "நான் உன் பின்னால் வருவேன். நான் இடது பக்கம் திரும்பு என்றால் இடது பக்கம் திரும்ப வேண்டும். வலது பக்கம் திரும்ப வேண்டும் என்றால் வலது பக்கம் திரும்ப வேண்டும். நீ நடப்பதை நிறுத்தக்கூடாது. நடந்து கொண்டே இருக்க வேண்டும். எது நடந்தாலும் பின்னாடி திரும்பி பார்க்கக் கூடாது." அப்படி பார்த்தால் கற்சிலையாகி விடுவாய் என்கிறது. முதலாமவன் நடந்து செல்ல தேவதை வழி காட்டிச் சென்றது. திடீரென பின்னால் வரும் சலங்கை ஒலி கேட்கவில்லை. என்னாயிற்று என தன்னறியாமல் முதலாமவன் திரும்பி பார்க்கிறான். நிபந்தனையை மீறியதால் கற்சிலையாகி விடுகிறான்.

அடுத்து இரண்டாமவன் கிளம்புகிறான். கிட்டத்தட்ட நிபந்தனை களுக்கு உட்பட்டு பாதி தூரம் வந்து விடுகிறான். திடீரென சிரிப்பு ஒலி கேட்கிறது. ஆர்வம் மிகுதியால் திரும்பி பார்க்கிறான். அவனும் கற்சிலையாகி விடுகிறான்.

மூன்றாமவன் அடுத்து வருகிறான். இவனுக்கும் இதே நிபந்தனையுடன் தேவதை முன் வருகிறது. இவனும் பின் வரும் சத்தம் நின்று போனாலும் முன்னே செல்கிறான். பின்னால் அலறல் சத்தம்... சிரிப்பொலி... இவைகளுக்கெல்லாம் திரும்பாமல் முன்னே செல்கிறான் வெற்றியும் பெற்று மூலிகையும் கைபற்றுகிறான். பின்னால் வரும் தேவதை தான் நமது மனசு, நிபந்தனையை விதித்துவிட்டு செயல் உறுதியை தடுக்க எல்லா முயற்சியையும் செய்யும். அதை புறக்கணிப்பதில் நம் வெற்றி அடங்கி உள்ளது.

*Compiled By : Mrs. R. Gayathri*
*Receptionist*

### நம்பித்தான் ஆகவேண்டும்
### 5S (தொடர்ச்சி XLVI)

**இரண்டடி உலகம்**

கடைசியாக, மிக முக்கியமான விஷயம்: சம்பந்தப்பட்ட தொழிலாளி ஒரு குறிப்பிட்ட கருவியை அடிக்கடிப் பயன்படுத்துகிறார் என்று தெரிந்த பிறகும், அதை நாம் வேறொரு இடத்தில் வைத்தால், வேறு யாரேனும் அதை எடுத்துச் சென்றுவிடுகிற சாத்தியங்கள் உண்டு.

அப்படி எடுத்து சென்றவர், அதை ஒழுங்காகச் சரியான இடத்தில் திருப்பி வைத்தால் பரவாயில்லை. அவர் மறதிக்காரராக இருந்து தன்னுடைய பணியிடத்திலேயே வைத்துக்கொண்டுவிட்டால்? கருவியைக் காணாமல், நம்முடைய லேத் தொழிலாளிகளுக்கு வேலை தடைப்பட்டுவிடுமே.

இது போன்ற பல விஷயங்களை உத்தேசித்து தான், அடிக்கடிப் பயன்படுத்தும் கருவிகள் அனைத்தும் தொழிலாளிக்குப் பக்கத்திலேயே

## கவிதைகள்

### வெற்றி உனக்கே

எதுவும் நடக்கலாம்!
எதுவும் நம் கையில் இல்லை!
எத்தனை நாம் முயன்றும்
தோற்றும் போகலாம்!
முதலையின் வாயில் அகப்பட்ட
மீனாய் வெளிவந்து உயிர் பிழைக்கலாம்!
நம் முயற்சி இறைவனின் சித்தம்,
சுற்றம், நட்பு செய்யும் உதவிகள்,
அதிர்ஷ்டம், பணபலம்
இத்தனைக்குப் பிறகு
நம் பக்கம் நியாயமும் இருந்தால்
நிச்சயம் வெற்றி பெறுவோம்!
வெற்றி என்பது
வல்லவருக்கும், நல்லவருக்கும்
பொருட்டல்ல!
முயற்சி நாம் செய்வோம்!
முடிந்ததை இறைவன் செய்வான்!
என்றாவது வெற்றி உன் கையில்!

*Compiled By : Miss. R. Divya Design*

### My Prayer Answered

I asked for strength,
God gave me difficulties to face.
I asked for wisdom,
God gave me problems to solve.
I asked for courage,
God gave me dangers to over come.
I asked for love,
God gave me trouble people to help.
I asked for favour,
God gave me opportunities to try.
I received nothing I wanted,
But I gained everything I needed.
My Prayers Have Been Answered

## சிந்தனைக்கு

அரசியல் வாழ்க்கையிலும் சமூக வாழ்க்கையிலும் ஒருவன் சுதந்திரம் பெறலாம். ஆனால் ஆசைகளுக்கும் கோபத்திற்கும் அவன் அடிமையாக இருந்தால் உண்மையான சுதந்திரத்தின் தூய இன்பத்தை அவனால் உணர முடியாது.

*Compiled By : Mrs. R. Jayanthi Purchase*

**பணியாளர்கள் மற்றும் பணியாளர்களின் குடும்பத்தாரிடமிருந்து கவிதைகள், கட்டுரைகள், கதைகள் வரவேற்கப்படுகிறது.**

**– Editor**

இருக்கவேண்டும் என்று வலியுறுத்துகிறது செய்டன்.

இவற்றையும், சும்மா மெஷினைச் சுற்றிப் போட்டுவைக்கக் கூடாது. அவற்றுக்கென்று உரிய அலமாரிகளோ, ‘பெக் போர்ட்’ போன்ற வேறுவிதமான சேமிப்பு ஏற்பாடுகளோ செய்து, அதில்தான் ஒழுங்காகப் பொருத்தி வைக்க வேண்டும்

இதற்குச் சிறந்த உதாரணமாக, நம்முடைய தொலைக்காட்சி ரிமோட் கருவியைச் சொல்லலாம். அநேகமாக நம் வீடுகளில் அதிக முறை பயன்படுத்தப்படுகிற பொருளும் இதுதான்.

இந்தத் தேடல், நேர விரயம், எரிச்சலைத் தவிர்ப்பதற்காகவே விசேஷமான ‘ரிமோட் ஹோல்டர்’கள் கிடைக்கின்றன. இவற்றில் நமது ரிமோட் கருவியைக் கச்சிதமாகப் பொருத்திவிடமுடியும். நாம் எப்போதும் உட்கார்ந்து டிவி பார்க்கிற சோ.ஃபா அல்லது நாற்காலியின் அருகே உள்ள சுவரில் இந்த ஹோல்டரை ஒட்டிவிட்டால், அதன்பிறகு டிவி பார்க்கிற எல்லாரும் ரிமோட் எங்கே இருக்கிறது என்று தேட வேண்டியதில்லை.

ஆனால், சுவரில் தொங்கிக்கொண்டிருக்கும் எடுத்துப் பயன்படுத்துகிறவர்கள், மீண்டும் அதை அங்கேயே திருப்பி வைக்கவேண்டும். இல்லாவிட்டால் இந்தத் திட்டம் சரிப்படாது.

இதேபோல்தான், கைக்கெட்டும் தூரத்தில் தொழிலாளர்களுடைய கருவிகளை வைப்பதும். கருவிகளைப் பயன்படுத்திய பிறகு அவற்றை மீண்டும் சரியான இடத்தில் திரும்பப் பொருத்துகிற பழக்கத்தையும் கண்டிப்பாக வலியுறுத்த வேண்டும். இல்லாவிட்டால் வாரக்கணக்காக நாம் உட்கார்ந்து கணக்குப் போட்டதெல்லாம் வீணாகிவிடும்.

அடுத்து, தினந்தோறும் இருபது முறைக்குக் குறைவாகப் பயன்படுத்தப்படுகிற பொருள்களைக் கவனிக்கவேண்டும். முதல் வகைப் பொருள்களைப்போல் இவை அதிமுக்கியமானவை அல்ல. என்றாலும், தினந்தோறும் யாரேனும் இவற்றை உபயோகப்படுத்திக் கொண்டுதான் இருக்கிறார்கள்.

ஆகவே, இவற்றைப் பணியிடங்களிலேயே, அதாவது தொழிலாளர்களின் இரண்டடி வட்டத்துக்குள்ளாக வைக்கவேண்டிய கட்டாயம் இல்லாவிட்டாலும், அருகே பொதுவான ஓர் இடத்தில் சேமித்துவைப்பது அவசியமாகிறது.

தொடரும்…

*The Management, staff and students of Tiaano Vidyashram cordially Invite you for the*

**“BLOSSOM - 2015”**

- *Late Dr. A.P.J.Abdul Kalam's Jayanthi*
- *Grandparents Day*
- *Plantation Day*

**to be held on 15th October 2015**

**at**

**4.30 pm in the School Premises**

**Mr. K. Sivakumar**

**has kindly consented to be the Chief Guest of the day.**